Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

31 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 31 | பாலம்: 17 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | September 01, 2021

# கனடிய மத்திய அரசிற்கான தேர்தல்

2021 ஒகஸ்ற் 15இல் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ 22 மாதங்கள் மட்டுமே பதவியில் இருந்த மத்திய அரசைக் கலைத்து தேர்தலை நடத்துமாறு கனடிய ஆளுனர் மேரி சைமனைக் கேட்டார். அவரும் அதை ஏற்றுக்கொண்டு கனடிய நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.

கனடாவின் 44ஆவது நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தல் 2021 செப்ரெம்பர் 20ஆம் திகதி நடைபெற உள்ளது. மத்திய அரசுக்கான தேர்தல் பிரசாரம் 36 நாட்களில் இருந்து அதி கூடியது 50 நாட்கள்வரை நடைபெறலாம். இம்முறை தேர்தல் பிரசாரம் ஆகக் குறைந்த அனுமதிக்கப்பட்ட 36 நாட்களில் நடைபெறவுள்ளது.

கனடாவில் கோவிட்-19 பெரும் தொற்று நோய்ப் பரவல் காலத்தில் பல மாகாண அரசிற்கான தேர்தல்கள் நடைபெற்றிருந்தாலும் இதுவே முதலாவது மத்திய அரசிற்கான நாடு தழுவிய தேர்தல் ஆகும். இத்தேர்தலில் நேரடியாக வாக்களிக்கச் செல்லும் மக்கள் முகக் கவசம் அணிந்து செல்லுமாறு கேட்கப்படுகின்றனர். வாக்குப்பதிவு நடைபெறும் இடங்களில் சமூக இடைவெளியைக் கடைபிடிக்குமாறும் கேட்கப்படுகின்றனர். அங்கே செல்லும் மற்றும் வெளியேறும் பாதைகளில் கை சுத்திகரிப்பு சாதனங்கள் வைக்கப்பட்டிருக்கும். வாக்களிப்பு நிலையங்களில் தொழில் புரிவோர் முகக்கவசம் அணிந்து plexiglass தடுப்புகளுக்குப் பின்னால் இருந்தே பணியாற்றுவர். ஒரு தரம் மட்டும் பாவிக்கக்கூடிய பென்சில்களே வாக்களிப்பதற்கு வழங்கப்படும். வாக்களிப்பு நிலையங்களில் கதவுக் குமிழ்கள் மற்றும் பொதுமக்கள் பாவிக்கும் இடங்கள் தொழிலாளர்களால் அடிக்கடி சுத்திகரிக்கப்படும். வாக்களிப்பு நிலையங்களில் பணியாற்றுவோர் கட்டாயமாகத் தடுப்பூசி போட்டவராக இருக்கத் தேவையில்லை. ஆனால் அவர்கள் கோவிட்-19 தொற்று நோய்ப் பரவல் தடுப்பு முறைகளைச் சுகாதார விதிகளுக்கு ஏற்ப கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டும்.

கனடாவின் தலைமைத் தேர்தல் அதிகாரி Stéphane Perrault கனடிய மத்திய அரசிற்கான பொதுத் தேர்தலைப் பாதுகாப்பாக நடத்த முடியும் என ஊடகங்களுக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் உலகம் முழுவதும் பல நாடுகளில் இந்த கோவிட்-19 பெரும் தொற்று நோய்ப் பரவல் காலத்தில் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஆனால் ஒரு இடத்திலும் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களித்தோர் மூலம் கோவிட்-19 தொற்றுநோய் பரவியதாகத் தரவுகள் ஏதும் இல்லை என்றார்.



கனடாவில் வழமையாக வெளிநாடுகளில் வாழ்வோர் அல்லது தமது தேர்தல் தொகுதிக்குத் தேர்தல் நாளில் வந்து வாக்களிக்க முடியாதோர் என ஒரு சிலரே தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றவராகக் கருதப்படுவர். ஆனால் இம்முறை தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற எவரும் விரும்பினால் தபால் மூலம் வாக்களிக்கலாம்.

2019இல் நடைபெற்ற மத்திய அரசிற்கான பொதுத்தேர்தலில் 50,000 வாக்காளர் மட்டுமே தபால் மூலம் வாக்களித்திருந்தனர். ஆனால் இம்முறை 2 மில்லியன் தொடக்கம் 3 மில்லியன் வரையிலான வாக்காளர் தபால் மூலம் வாக்களிப்பர் எனத் தேர்தல் அலுவலகம் எதிர்பார்க்கிறது. தபால் மூலம் வாக்களிக்க விரும்புவோர் செப்ரெம்பர் 14ஆம் திகதிக்கு முன்னர் இணையத்தளம் மூலம் தேர்தல் அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

2019இல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு $502.4 மில்லியன் செலவழிக்கப்பட்டது. இம்முறை நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு இது $610 மில்லியனாக அதிகரிக்கும் எனத் தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது. வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் $50 மில்லியன் மேலதிக பணமும், மேலதிக சுகாதார நடவடிக்கைகளால் $50 மில்லியன் மேலதிக பணமும் செலவழிக்கப்படலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. கடந்தமுறை தேர்தல் நடத்தியதற்கான செலவீனம் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவருக்கு $18.35ஆக இருந்தது.

இம்முறை நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கு வேட்பாளராகப் பதிவு செய்யும் இறுதி நாள் ஒகஸ்ற் 30ஆம் திகதி மாலை 2 மணி (உள்ளூர் நேரம்) ஆகும். செப்ரெம்பர் 2ஆம் திகதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். கனடிய நாடாளுமன்றத்தில் 338 ஆசனங்கள் உள்ளன. அவற்றில் 170 ஆசனங்களைப் பெறும் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்.

**2019 பொதுத் தேர்தலில் கட்சிகள் பெற்ற ஆசனங்கள்**

| | |
|---|---|
| லிபரல் கட்சி | 157 |
| பழமைவாதக் கட்சி | 121 |
| புளக் குவிபெக்குவா கட்சி | 32 |
| புதிய ஜனநாயகக் கட்சி | 24 |
| பசுமைக் கட்சி | 3 |
| சுயேட்சை வேட்பாளர் | 1 |

இம்முறை நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் மேலே கூறப்பட்ட ஐந்து கட்சிகள் போட்டியிட்டாலும் அதில் மூன்று கட்சிகளே சென்றமுறை போட்டியிட்ட தலைவரின் கீழ் போட்டியிடுகின்றன.

தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083

Lexus of Richmond Hill
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

My services are 100% FREE
For First Time Buyers/Buyers/Tenants
Para Tlal
www.dalpara.com

FOR ALL YOUR COTTAGE NEEDS
SIVAGE SIVAGUMARAN CPA, CGA, BBA
REALTOR®
416-553-8902
sivagehomes@sivage.ca
www.sivage.ca

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Real Estate Broker
416.624.4803
suku07@hotmail.com
www.sukumarhomes.com

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129, Markham & Steeles, Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5, Markham & Eglinton, Tel: 416.264.3232
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon
Dentistry for children, adults and seniors

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Broker
Dir: 647.839.0079



RE/MAX ACE REALTY INC., BROKERAGE
EXPERIENCE THE DIFFERENCE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in- Eng(Hons)
Broker, ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Warden / St.Clair
$999,000
Freehold Town - 3BR + 3WR
Courtice
Sold Over Asking in 6 Days
Detached Bungalow- 2BR + 2WR
Victoria Park / Ellesmere
$849,000
Semi-Detached - BR: 3+3 WR:2
Markham/ Eglinton
$1,847,860
BR: 6+4 WR: 7
Donmills/Sheppard
$788,000
900+ SF - 2BR + 2WR
Bowmanville
For Lease
Coming Soon to Toronto MLS
Near School - 4BR + 3WR
Birchmount/Lawrence
$599,000
900+ SF BR: 2 WR: 2
Markham/16 th
$499,900
BR: 1+1 WR:1 Maint. Fee: $475





Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்
Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்
1.0% முதல் 1.5% வரை
அதிரடி சிறப்பு வட்டி வீதம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்
நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்
அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

# தமிழ் நாட்டின் வரலாறு மற்றும் சுற்றுலா சிறப்புகள்




செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

தமிழ்நாட்டின் வரலாறும் தமிழ் மக்களின் நாகரிகமும் உலகின் மிகப் பழமையானவையாகும். இந்தியத் துணைக் கண்டத்தின் தென்முனையில் அமைந்துள்ள தமிழ் நாட்டை முதலாம் நூற்றாண்டு முதல் நான்காம் நூற்றாண்டுவரை சங்ககால மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டுள்ளது. பின்னர், காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு தமிழ்நாட்டின் பெரும்பகுதியை பல்லவ மன்னர்கள் ஒன்பதாம் நூற்றாண்டுவரை அதாவது கிட்டத்தட்ட ஐநூற்று ஐம்பது ஆண்டுகள் நிலைத்து ஆட்சி புரிந்துள்ளனர். ஒன்பதாம் நூற்றாண்டில் சோழர் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர். இராசராச சோழன் மற்றும் அவரது மகன் இராசேந்தர சோழன் காலத்தில் சோழர் தென்னிந்தியாவில் ஆற்றல் மிக்கவர்களாக உருவெடுத்தனர். இவர்களுடைய பேரரசு ஒரிசா, வங்காள தேசம், இலங்கையின் சில பகுதிகளுடன் அந்தமான் நிக்கோபார் தீவுகள், சுமத்ரா, மலேயா மற்றும் பர்மா அருகிலுள்ள பெகு தீவுகளையும் தனது பலம் வாய்ந்த கப்பல் படையைக் கொண்டு கைபற்றினர். பதிநான்காம் நூற்றாண்டில் பாண்டியர்கள் மீண்டும் எழுச்சி பெற்றனர். இருப்பினும் அந்த எழுச்சி நீண்ட காலம் நீடிக்கவில்லை. காரணம் வடநாட்டில் இருந்து படையெடுத்து வந்த இஸ்லாமியர் மற்றும் சுல்த்தான்கள் சோழர்களையும் பாண்டியர்களையும் ஆற்றல் அற்றவர்களாக்கினர்.



இறுதியாக, 1639ஆம் ஆண்டு ஆங்கிலேயர் மெட்ராஸில் கிழக்கிந்தியக் கம்பெனியை நிறுவியதுடன், தமிழ்நாட்டு சிற்றரசர்களிடையே நிலவி வந்த சண்டைகளைப் பயன்படுத்தி அவர்களைப் பிரித்தாண்டு அவர்களின் மேல் தங்களின் அதிகாரத்தை செலுத்தினர். அதைத் தொடர்ந்து தென்னிந்தியாவும் மெல்ல மெல்ல ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. 1947ஆம் ஆண்டு இந்தியா விடுதலை அடைந்தபோது தமிழ்நாடு, கடலோர ஆந்திர பகுதிகள், மேற்கு கேரளம், தென்மேற்கு கர்நாடகா ஆகியவை ஒன்றுசேரந்து மெட்ராஸ் மாநிலமாக உருவானது. பின்னர், 1953ஆம் ஆண்டு தெலுங்கு பேசும் மக்களுக்காக ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது. மேலும், 1956ஆம் ஆண்டு மெட்ராஸ் மாநிலத்தின் மேற்கு கடற்கரை பகுதிகள் கேரளாவுக்கும் மற்றும் கர்நாடகத்திற்கும் இடையே பிரித்தளிக்கப்பட்டன.

முன்னதாக தமிழகத்தை ஆங்கிலத்தில் மெட்ராஸ் என்று அழைக்கப்பட்டு வந்தது. இதனை தமிழ்நாடு என்று மாற்றக்கோரி பல போராட்டங்கள் நடைபெற்றன. இறுதியில், விடுதலைப் போராட்ட வீரர் சங்கரலிங்க நாடார் 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தார். பின்னர், சங்கரலிங்கனாரின் தமிழ்நாடு என்ற பெயர் சூட்டுவது குறித்த கோரிக்கைக்குப் பல இயக்கங்கள் மூலம் அழுத்தம் கொடுக்கப்பட்டதன் காரணமாக 1969ஆம் ஆண்டு தமிழ்நாடு என்ற பெயர் மாற்றுவதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.




பழங்காலத்து கல்வெட்டுகள் மற்றும் இலக்கியங்களின் அடிப்படையில், சிவபெருமானால் அகத்தியருக்குத் தமிழ் கற்பிக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. உலகின் ஒரு மிகப் பழமையான மொழி நவீன காலம்வரை நிலைத்துள்ளது என்றால் அந்த மொழி தமிழ் மட்டும்தான். தமிழகம் மட்டுமல்லாது, இலங்கை மற்றும் சிங்கப்பூரில் பேசப்படும் மூல மொழியாகவும் தமிழ் திகழ்கின்றது. இந்திய அரசாங்கம் செம்மொழியாக அங்கீகரித்துள்ள மொழிகளில் தமிழ்மொழி முதலிடத்தில் உள்ளது. தமிழின் மிகப் பழமையான இலக்கியங்கள் யாவும் செய்யுள் வடிவில் இயற்றப்பட்டுள்ளன. இந்திய வரலாற்றில் மிகவும் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறள் என்ற அறநூலை எழுதினார். பழங்காலப் படைப்புகளில் ஒன்றான திருக்குறள் உலகிலுள்ள 41 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றது.

தமிழ்நாடு அழகிய நிலப் பகுதிகள் மற்றும் பாரம்பரியச் சின்னங்கள் நிறைந்த சுற்றுலா முதன்மைத்துவம் உள்ள மாநிலமாகும். இது திராவிடக் கட்டிடக்கலை பாணியைப் பிரதிபலிக்கும் கோயில்களுக்குப் புகழ் பெற்றது.

தொடரும்...



# சுய கட்டுப்பாடு மட்டுமே தீர்வு




இலங்கையில் மிக மோசமாகப் பரவி வரும் கொரோனா தொற்றலை வட மாகாணத்திலும் வேகமெடுத்து வருகின்றது. ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் தொற்றுப் பரவல் இருந்த போதும் வடக்கின் ஏனைய மாவட்டங்களில் அது குறைவாகவே காணப்பட்டது.

குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் அதிகளவிலான தொற்றுப் பரவல் ஆரம்பத்தில் ஏற்படவில்லை. பெரிய நகரங்களை விடவும் மக்கள் நெருக்கடி குறைவாகக் காணப்படும் காரணத்தால் இப்பிரதேசங்களில் தொற்றுப் பரவல் குறைவாக இருந்தது. இன்று கிளிநொச்சி உள்ளிட்ட பல பிரதேசங்களில் கொரோனா தொற்றாளர்கள் நாளுக்கு நாள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

கிளிநொச்சியில் குடும்பம் குடும்பமாகவே பலர் தொற்றுக்கு உள்ளாகி வருகின்றனர். மருத்துவமனைகளில் நோயாளிகள் அதிகரிக்கும் நிலையில், மருத்துவர்கள், தாதிகள் மற்றும், மருத்துவமனை ஊழியர்களுக்கும் கொரோனா தொற்றுகின்றது. இதனால், மருத்துவமனைகளில் ஊழியர்கள் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றாளர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், மரணங்களும் அதிகரித்து வருகின்றன. வடக்கில் கொரோனா தொற்று இந்தளவிற்கு மோசமானதற்குக் காரணம் பொதுமக்களின் சுய கட்டுப்பாடு இன்மை தான் என்றால் அது மிகையாகாது. மாஸ்க் அணிவதும், சமூக இடைவெளியை கடைப்பிடிப்பதும் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பதைற்கான முக்கியமான நடவடிக்கைகளாகும். இதனை மக்கள் முறையாக பின்பற்றுவதில்லை.

இவற்றிற்கும் அப்பால், ஒன்றுகூடும் நிகழ்வுகளை தவிர்ப்பது அல்லது மக்கள் ஒன்றுகூடும் சந்தர்ப்பங்களில் சுகாதார நடைமுறைகளைப் பேணுவது என்பது மக்கள் மத்தியில் முறையாக கடைப்பிடிக்கப்படுவதில்லை. மரணச்சடங்குகள் கூட வரையறுக்கப்பட்ட அளவிலானவர்களுடன் நடைபெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவ்வாறு நடைபெறுவதில்லை. அதிகளவிலானவர்கள் மரணச் சடங்குளில் கலந்துகொள்கின்றனர். அச்சந்தர்ப்பங்களில் அவர்கள் மாஸ்க் அணிவதையும், ஒருவருக்கொருவர் இடைவெளிகளை பேணுவதையும் புறக்கணிக்கின்றனர்.

இதனை விடவும், திருமணம், பூப்படைதல் சடங்குகள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் என அனைத்திலும் மக்கள் கட்டுப்பாடின்றி ஒன்றுகூடுகின்றனர். இவ்வாறான நிகழ்வுகளுக்கு மாவட்டங்களை கடந்து வாகனங்களில் செல்கின்றனர்.

அண்மையில் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மரண நிகழ்வு ஒன்றிற்காக ஒரு வாகனத்தில் சென்றவர்கள் அனைவரும் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். அந்த வாகனத்தில் சென்றவர்களில் இரண்டொருவர் ஏற்கனவே கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களாக இருந்துள்ளனர். அவர்கள் முன்னதாக மற்றுமொரு மரணச் சடங்கிற்கு சென்ற நிலையில் தொற்று ஏற்பட்டுள்ளது. அவர்களும் குறித்த வாகனத்தில் பயணித்ததால் ஏனைய பயணிகளுக்கு தொற்றுப் பரவியுள்ளது.

சந்தைகள், வணிக நிலையங்களிலும் மக்கள் இடிபடுகின்றனர். சிறுசிறு சந்திப்புகளில் கூட மாஸ்க்கை கீழே இழுத்து விட்டபடி உரையாடுகின்றனர். கோவில் திருவிழாக்களில் தடைகளைக் கடந்து பிரவேசிக்கின்றனர். சுகாதார பரிசோதகர்கள், பாதுகாப்பு கடமையில் இருப்போருடன் முரண்படுகின்றர். தடைவிதிப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இவ்வாறான நிலைமைகளே வடக்கின் பிரதேசங்களில் கொரோனா தொற்று அதிகரிக்கக் காரணமாகும். தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலில் உள்ள போதும், கட்டுப்பாடுகளை மீறி மக்கள் நடமாடுவதை காண முடிகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை அதாவது- இப்பத்தி எழுதுகின்ற வரையில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 233ஆக அதிகரித்துள்ளது. பலர் நாளாந்தம் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த 28ஆம் திகதிவரை கொரோனா தொற்றினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 18ஆக அதிகரித்துள்ளதாகவும் பல தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருவதாகவும் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சியிலும் கணிசமானோர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். நாள் தோறும் பலர் பரிசோதனைகளில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். உயிரிழப்புக்களும் இடம்பெறுகின்றன. கிளிநொச்சியில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழப்போரின் உடல்கள் வவுனியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டு தகனம் செய்யப்படுகின்றன. கிளிநொச்சியில் நாளாந்தம் தொற்றுக்கு உள்ளாகின்றவர்கள் மற்றும் உயிரிழப்போர் விபரம் சரியான முறையில் கிடைக்கப் பெறுவதில்லை. முல்லைத்தீவு மற்றும் வவுனியாவிலும் இதே நிலைதான். சரியான விபரங்கள் உரிய தரப்பினரால் ஊடகங்களுக்கு வழங்கப்படுவதில்லை. யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் சுகாதார தரப்பினர் மற்றும், மருத்துவர்களிடமிருந்து தகவல்கள் உடனுக்குடன் வெளியிடப்படுகின்றன. வவுனியாவில் மூன்று கிராம சேவகர் பிரிவுகள், அதிக கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் பகுதியாக இருப்பதாக சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரம், நொச்சிமோட்டை, தோணிக்கல் ஆகிய பகுதிகளில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் டெல்டா திரிபு அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இது தொற்றும் வீதம் அதிகமாகவும், இது மரண வீதத்தை அதிகரிக்கக் கூடியது எனவும் மக்களை அவதானமாக செயற்படுமாறும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார். வடக்கிலும், டெல்டா தொற்று பரவவினால் அது மோசமான பாதிப்பையே ஏற்படுத்தும்.

இந்த நிலைமைகளுக்கு மத்தியில், பொது மக்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருவது போல் வட மாகாணத்திலும் துரிதமாகவே நடைபெற்று வருகின்றன. 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு வீடுகளுக்குச் சென்று தடுப்பூசி ஏற்றப்படுகின்றது. சீனத் தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசியே வடக்கில் ஏற்றப்பட்டு வருகின்றது. இதனை ஏற்றிக்கொள்வதற்கு வடக்கு மக்கள் சிலர் தயக்கம் காட்டி வருவதையும் அறிய முடிகின்றது. அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் சினோபார்ம் தடுப்பூசியை அங்கீகரிக்கவில்லை என்பதால் தாங்கள் அந்நாடுகளுக்கு செல்வதில் சிக்கல் ஏற்படும் என்பதற்காகவே அவர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

இதேவேளை, தடுப்பூசிகளை ஏற்றிக் கொண்டோர் தங்களுக்கு இனிமேல் தொற்று ஏற்படாது எனக்கூறி, கட்டுப்பாடுகளை தளர்த்தி வருகின்றமையினையும் அவதானிக்க முடிகின்றது. இரண்டு தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டோருக்கும் கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தடுப்பூசியை ஏற்றிக்கொண்டாலும், கட்டுப்பாடாக இல்லாவிட்டால் தொற்று ஏற்படும் என்பதை மக்கள் உணர வேண்டும். தடுப்பூசியை விடவும், அவசியமின்றி வீட்டை விட்டு வெளியேறாமல் இருப்பதும், வெளியே செல்லும்போது, மாஸ்க் அணிந்து செல்வதும், சமூக இடைவெளியைப் பேணுவதும் சிறந்த செயற்பாடாகும்.

சில தினங்களுக்கு முன்னர் இலங்கையின் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவிற்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தனக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது குறித்து அவர் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

தனது வாகன சாரதிக்குக் கொரோனா தொற்று இருப்பதை அறிந்திராத சந்தர்ப்பத்தில், தான் வாகனத்தில் மாஸ்க் அணியாமல் பயணித்ததாலேயே தனக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர், பல சந்தர்ப்பங்களில் தொற்றுக்கு உள்ளானோருடன் தொடர்பு கொண்டிருந்தாலும், அந்த சமயங்களில் தான் சரியாக மாஸ்க் அணிந்ததால் ஆரோக்கியமாக இருக்க முடிந்தது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா நோயாளிகளை சந்திக்கும் மருத்துவர்கள் பலரும் தாங்கள் மாஸ்க்கை முறையாக அணிவதாலேயே தொற்றுப் பரவலிருந்து பாதுகாத்துக் கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். எனவே, மாஸ்க் அணிவதும் ஒருவருக்கு ஒருவர் இடைவெளியை பேணுவதுமே இந்த பெருந்தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரேயொரு வழியாகும்.

**எதுவுமே எளிதல்ல...
ஆனால் எல்லாம் சாத்தியமே...**

விளம்பரம்
VLAMBARAM
31ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# MORTGAGE

**MORTGAGE IN ANY SITUATION**

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட் (HELOC)
- ⇒ Private 1st Mortgage (No Income Verification)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்
- ⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



www.mortgageclinicccanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது



**Cell : 416-624- 4843**
416-613-2788 / 416-816-9011

**ஜெ(Jey)இராசதுரை**
MBA. BBA (Hon) AMP
Team Leader / Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# நாமும் நமது இல்லமும் 590

## கனடியப் பொதுத் தேர்தலும் ஆதன வியாபாரமும்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ஆட்சி செய்யப் போதிய பலமற்ற (minority) லிபரல் அரசு, தமக்குச் சாதகமான நிலைமை காணப்படுவதாகக் கருதி கோவிட்-19 காலத்தில் பொதுத் தேர்தலை நடத்த எண்ணியுள்ளது. இதன் தொடர்ச்சியாகக் கனடிய மத்திய அரசின் 44ஆவது தேர்தல் 2021 செப்ரெம்பர் 20 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற வுள்ளது. கடந்த தேர்தல் (43ஆவது) ஒக்ரோபர் 22, 2019இல் நடைபெற்றது. மொத்தமாக 338 தொகுதிகளைக் கொண்ட கனடிய நாடாளுமன்றத்தில் 157 தொகுதி களை லிபரல் கட்சி பெற்றிருந்தது. தனியாக ஆட்சி செய்யக் குறைந்தது 170 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்தத் தனிக்கட்சிப் பலம் போதாமல் உள்ளது. இதனால் ஒவ்வொரு சட்டங்களும் மற்றைய கட்சிகளின் உதவியுடன் நிறை வேற்ற வேண்டிய நிலையில் அரசு இருந்து வருகிறது. இதுவே தேர்தலுக் குரிய முக்கிய காரணமாக உள்ளது.

மக்கள் விரும்பியோ விரும்பாமலோ அரசியலே மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றது. அரசியல்வாதிகளே புதிய திட்டங்களையும் சட்டங்களையும் உருவாக்குகின்றனர். இதனையே மக்கள் பின்பற்ற வேண்டும். எனவே தகுதியான வர்களை ஆட்சியில் அமர்த்த வேண்டியது மக்களின் மிகப்பெரிய கடமையுடன் சேர்ந்த உரிமையும். ஆகும்.

கனடிய அரசியல் தலைவர்களால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் ஆதன வியாபாரத்திலும் மிகப்பெரிய பங்கு வகிக்கிறது. 2008/2009 காலப்பகுதியில் ஏற்பட்ட கனடியப் பொருளாதாரத்தின் வீழ்ச்சி அப்போதைய அரசும் அன்றைய மத்திய வங்கி ஆளுனரும் தகுந்த நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் எடுத்ததால் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இலகுவாகக் கனடிய மக்கள் வெளியேறி இருந்தனர். உதாரணமாக வட்டி வீதக் குறைப்பு, அடமானக் கடனை திருப்பிக் கொடுக்கும் காலத்தை அதிகரித்தது என்பவற்றைக் குறிப்பிடலாம்.

கோவிட்-19இன் உண்மையான பாதிப்பு மக்களுக்குத் தெரிய வந்த பின்பாக மார்ச் 23, 2020இல் கனடிய மக்கள் தமது வீடு களிலேயே முடக்கப்பட்டனர். இந்தக் காலத்தில் ஆதன வியாபாரம் முற்றாகத் தடைப்பட்டிருந்தது. அரசியல் தலையீடு மற்றும் கனடிய மத்திய வங்கி எடுத்த நடவடிக்கைகளால் 1.75%ஆக இருந்த கனடிய வங்கியின் வட்டி வீதம் மார்ச் 05, 2020இல் 0.5%ஆல் குறைக்கப்பட்டு



1.25% ஆகவும், மார்ச் 13, 2020இல் மேலும் 0.5%ஆல் குறைக்கப்பட்டு 0.75% ஆகவும், மேலும் மார்ச் 27, 2020இல் மீண்டும் 0.5%ஆல் குறைக்கப்பட்டு 0.25% ஆகவும் சடுதியாகக் குறைக்கப்பட்டது. அதாவது மார்ச் 2020இல் இருந்து இன்று வரை கனடிய வங்கியின் வட்டி வீதம் 0.25%ஆகவே காணப்படுகிறது. அரசின் உதவியால் ஏற்பட்ட இந்த வட்டி வீதக் குறைப்பால் ஆதன வியாபாரம் யூன் 2020 இல் இருந்து அதிகரிக்கத் தொடங்கியது. இந்த நிலைமை முன்பு ஒருபோதும் இல்லாதவாறு இன்றுவரை அதிகரித்தே செல்கின்றது.

கோவிட்-19இன் பாதிப்பால் சகல மட்டத்தி லும் விலை அதிகரித்துவிட்டது. உதாரண மாக ஆதனம் கட்டப்படும் இடத்தின் விலை (land value), ஆதனம் கட்டுவதற் காக அரசிற்குச் செலுத்தப்படும் கட்டணம் (development fee), தொழிலாளர்களுக் கான ஊதியம், நிர்மாணப் பொருட்களின் விலை இவ்வாறு புதிய ஆதனத்தைக் கட்டுவதற்கான செலவுகள் மிகவும் அதிகரித்துள்ளது. இப்புதிய ஆதனங் களின் விலை அதிகரிப்பு மற்றும் ஏற்கனவே குடியிருக்கும் ஆதனங்களின் விலை (resale) அதிகரிப்பு என்பன புதிதாக அல்லது முதற் தடவை ஆதனம் வாங்குபவர்களை மிகவும் பாதித்துள்ளது. 1 மில்லியன் என்பது ஓர் ஆதனத்தின் சாதாரண விலையாக ரொறொன்ரோ பகுதி யில் காணப்படுகிறது.

முக்கியமான மூன்று அரசியல் கட்சிகளும் தமது தேர்தல் வாக்குறுதிகளில் ஆதன விலையை எவ்வாறு கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரலாம் எனத் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றனர். ஆதன விலையேற்றம் தொடர்பாக ஒவ்வொரு கட்சியும் வெவ் வேறான அரசியல் வாக்குறுதிகளைக் கொடுத்து வருகின்றனர். அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

- அடமானக் கடனைத் திருப்பிக் கொடுக்கும் காலத்தை நிரந்தரமாக 25 வருடங்களிலிருந்து 30 வருடங்களாக அதிகரித்தல்.
- வெளிநாட்டில் இருந்து ஆதனம் வாங்கு வதைக் குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத்தி வைத்தல் அல்லது தடைசெய்தல்.
- வாங்கிய ஆதனத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குள் விற்பவர்களுக்கு அதிக வரி விதித்தல் அல்லது தடை செய்தல்.
- முதல் தடவை ஆதனம் வாங்குபவர் களுக்கு அதிக சலுகைகள் வழங்குதல்.
- ஆதனத்தைச் சந்தைப்படுத்தி விற்கும் போது ஒன்றுக்கு மேற்பட்டோர் போட்டி போடும்போது ஒவ்வொரு வாங்குபவர் களுக்கும் உண்மையான (offerred price) விலையைத் தெரியப்படுத்துதல்.
- வாடகைக்குக் கொடுக்காமல் அல்லது பாவிக்காமல் இருந்தால் அதற்கு மேலதிக வரி விதித்தல்.
- அடமானக் கடனுக்குரிய காப்புறுதியை (CMHC Insurance) குறைத்தல்.

தேர்தல் முடியும்வரை இதுபோன்ற பல வாக்குறுதிகள் தொடரலாம். இவற்றில் எத்தனை வாக்குறுதிகள் நிறைவேற்றப் படும் என்பது தேர்தலின் பின்னர்தான் தெரியவரும்.



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsilitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stomatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

## என்னைத்தான் பார்க்கவில்லை!

காசு பணம் சரி பார்த்தேன்
நகை நட்டு சரி பார்த்தேன்
சொத்து சுகம் சரி பார்த்தேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

பட்டி தொட்டி சரி பார்த்தேன்
பற்று பாசம் சரி பார்த்தேன்
பங்கு பாகம் சரி பார்த்தேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

ஆட்டம் பாட்டம் சரி பார்த்தேன்
தோட்டம் துரவு சரி பார்த்தேன்
அக்கம் பக்கம் சரி பார்த்தேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

ஊர் உலகம் சரி பார்த்தேன்
உறவு முறை சரி பார்த்தேன்
வரவு வரை சரி பார்த்தேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!



நடந்து வந்த பாதையிலே
கடந்து வந்த பயணத்திலே
எத்தனையோ பார்த்துவிட்டேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

முனைவர் மு. அ. காதர்
சிங்கப்பூர்

# கனடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பழமைவாதக் கட்சியும் பசுமைக் கட்சியும் புதிய தலைமையின் கீழ் இம்முறை தேர்தலைச் சந்திக்கின்றன.


**ஜஸ்ரின் ரூடோவின் தலைமையில் போட்டியிடும் லிபரல் கட்சியின் கொள்கைகளில் குறிப்பிடத்தக்கவை:**



- தொழிலாளருக்கு 10 நாள் சுகவீனகால விடுமுறை வழங்குதல்.
- குழந்தை பராமரிப்புச் செலவு நாளொன்றுக்கு $10ஆக அமல்படுத்தல்.
- தனிப்பட்ட உதவி புரியும் பணியாளரின் (PSW) சம்பளத்தை மணித்தியாலத்திற்கு $25ஆக உயர்த்துதல்.
- வயது முதிர்ந்தோருக்கான வரிச்சலுகையளித்தல். (Double Home Accessibility Tax Credit)
- காட்டுத் தீ அணைக்கும் பணியாளர் வேலைக்கு 1,000பேரை புதிதாகப் பயிற்றுவித்தல்.
- கோவிட்-19 பண உதவிச் சலுகையைத் தொடருதல்.
- சினிமா, தொலைக்காட்சி மற்றும் கலைகளின் வளர்ச்சிக்கு அதிக பணம் ஒதுக்குதல்.
- பசுமை வாயுக்களின் வெளியேற்றத்தை 2005ஆம் ஆண்டிலிருந்த அளவில் இருந்து 45%இனால் 2030ஆம் ஆண்டிற்கு முன்னர் குறைத்தல்.
- பசுமை வாயுக்களின் வெளியேற்றத்தை 2050ஆம் ஆண்டில் நிகர பூச்சிய நிலைக்குக் கொண்டுவருதல்.
- கனடிய மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களின் ஒத்துழைப்புடன் $33 மில்லியனை கனடாவின் உட்கட்டமைப்புத் திட்டங்களில் முதலிடுதல்.

**2020 ஒகஸ்ற் 24இல் இருந்து தலைமையேற்ற Erin O'Tooleஇன் புதிய தலைமையின்கீழ் போட்டியிடும் பழமைவாதக் கட்சியின் கொள்கைகளில் குறிப்பிடத்தக்கவை:**

- கோவிட்-19 பெருந் தொற்றுநோய்க் காலத்தில் மறைந்த 1 மில்லியன் வேலை வாய்ப்பை மீளப் பெற்றுக் கொடுத்தல்.
- அரசாங்கத்தில் பொறுப்புணர்வை (Accountability) அதிகரிக்க புதிய ஊழல்த் தடுப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துதல்.



- மனநல சேவைக்காக மாகாணங்களுக்கு அதிக பணஉதவி வழங்குதல்.
- தற்கொலையைத் தடுக்க உதவும் மூன்று இலக்கத் தொலைபேசி வசதியை நாடு முழுவதும் கிடைக்கக்கூடியதாக உருவாக்குதல்.
- கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவலின் போது உருவான அவசர செலவுகளைக் குறைத்து அடுத்த 10 ஆண்டுகளில் வரவு செலவுத்திட்டத்தில் சமநிலையைப் பெறுதல்.
- உள்நாட்டில் தடுப்பூசி தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் சுகாதார பாதுகாப்புச் சாதனங்களை (PPE) உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை உருவாக்குதல்.
- நிகர பூச்சிய பசுமை வாயுக்களை வெளிவிடும் வாகனங்களைக் கனடாவில் தயாரித்தல்.
- அடுத்த 10 ஆண்டுகளில் மாகாணங்களுக்குச் சுகாதார பரிமாற்றத் தொகையாக 6% அல்லது $60 பில்லியன் உதவித் தொகையை சுகாதார சேவைகளுக்கு வழங்குதல்.
- மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களில் உள்ள நீண்ட காலப் பராமரிப்பு நிலையங்களைப் புனரமைப்புச் செய்ய $3 பில்லியன் பண உதவி வழங்கல்.
- புதிய பட்டதாரி மாணவர்களுக்கு முதல் மூன்று ஆண்டுகளுக்கு $100,000வரை வரி விலக்கும், பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் புதிய பட்டதாரி மாணவர்களுக்கு முதல் 5 ஆண்டுகளுக்கு $200,000வரை வரி விலக்கும் வழங்குதல்.

**ஜக்மீற் சிங் இனுடைய தலைமையில் போட்டியிடும் புதிய ஜனநாயகக் கட்சியின் கொள்கைகளில் குறிப்பிடத்தக்கவை:**

- வீட்டு வசதி, இரண்டாம் நிலைக் கல்வி (Post secondary education) மற்றும் கைத்தொலைபேசித் திட்டங்கள் போன்ற அத்தியாவசிய தேவைகளை மக்களுக்குத்



தகுந்த விலையில் கிடைக்க வழி வகுத்தல்.

- குழந்தை பராமரிப்பை மக்களுக்குத் தகுந்த செலவில் (Affordable) கிடைக்க வழி வகுத்தல்.
- கோவிட்-19 தொற்று நோய்ப் பரவலின் போது அதீத பணம் உழைத்த வணிகங்களுக்கு அதிக வரி விதித்தல்.
- தொழிலாளர்களுக்கு 10 நாள் சுகவீன கால விடுமுறை வழங்குதல்.
- பசுமை வாயுக்களின் வெளியேற்றத்தை நிகர பூச்சிய நிலைக்கு வருவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்.
- மக்களுக்கு பற்களைப் பராமரிக்க வசதி செய்யும் நாடுதழுவிய வழி முறையை உருவாக்குதல்.
- வேலை இழந்தவர்களுக்கு இலவச மனநல பராமரிப்பு முறைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- கோவிட்-19 தொற்று நோய்ப் பரவலின்போது அரசு வழங்கிய உதவிப் பணத்தை தொழில் நிறுவனங்கள் தமது தொழிலைத் திரும்பத் தொடங்கும்வரை வழங்குதல்.
- குறைந்த அளவு ஊதியத்தை மணித்தியாலத்திற்கு $15ஆக்குவது மட்டுமல்லாமல் அதற்கு வருடாந்த வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு வீத உயர்வு $20ஆக வரும்வரை வழங்குதல்.
- இலாப நோக்குடன் நடத்தப்படும் நீண்ட காலப் பராமரிப்பு நிலையங்களை மூடி அவற்றை மாகாண மற்றும் பிரதேச அரசுகள் எடுத்து நடத்த ஒழுங்கு செய்தல்.

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

- செல்வகுமார் -

### பகல் தூக்கம் போச்சு!



ஆசிரியர் ஒருவர் உணவிற்குப் பின் மாணவர்களைப் படிக்கச் சொல்லிவிட்டு மேசைமீது தலை வைத்துத் தூங்கி விடுவார். ஒரு நாள் மாணவர் பணி நேரத்தில் தூங்குகிறீர்களே எனக் கேட்டனர். நான் தினமும் கனவுலகம் சென்று அங்கு ஞானிகளை சந்தித்து ஞானம் பெறுகிறேன் என சாதுர்யமாகப் பதிலளித்தார்.

மாணவர் அசந்து விடுவரா என்ன? அவருக்குத் தக்க பாடம் புகட்ட விரும்பினர். மறு நாள் மதியம் சாப்பிட்டு முடிந்ததும் வகுப்பில் எல்லா மாணவரும் பெஞ்சில் தூங்குவது போலக் கண் மூடியிருந்தனர். கோபம் கொண்ட வாத்தியார் பிரம்பால் மேசையில் தட்ட அனைவரும் கண் விழித்தனர்.

ஏன் வகுப்பில் தூங்குகிறீர்கள்? எனக் கேட்டார். ஒரே குரலில் நாங்களும் உங்களைப்போலக் கனவுலகில் ஞானிகளை தரிசிக்கச் சென்றோம் என்றனர். அதைக் கேட்ட ஆசிரியர் ஆச்சரியம் அடைந்தார். அதன்பின் ஆசிரியர் துடிப்பானவராக மாறிப் பணியில் ஈடுபடத் தொடங்கினார்.


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# வேகமெடுக்கும் கொரோனா தொற்றும், சமாளிக்க முடியாத பொருளாதாரச் சரிவும்!

- விகிர்தன் -

இலங்கையில் அதிகரித்துவரும் கொரோனா பரவலை கட்டுப்படுத்த நாட்டை முடக்கி வைக்குமாறு பல தடவை பல தரப்பினராலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், கடந்த 20ஆம் திகதி தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை அரசாங்கம் அமல்படுத்தியுள்ளது. 30ஆம் திகதிவரை இந்த ஊரடங்கு அமலில் இருக்கும் இன்று முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் செப்ரெம்பர் 6ஆம் திகதிவரை இது நீடிக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய அரசாங்கம் கடும் நிர்ப்பந்தங்களின் காரணமாகவே நாட்டை முடக்கும் தீர்மானத்திற்கு வந்தது. அரசியல் கட்சிகள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் நாட்டை முடக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை தொடர்ந்து முன்வைத்து வந்தனர். அரசாங்கம் அதனை நிராகரித்து வந்தது. இதனையடுத்து நாடு முழுவதிலும் உள்ள வர்த்தகர் சங்கங்கள் வர்த்தக நிலையங்களை மூடும் நடவடிக்கையை மேற்கொண்டன. நாடு முழுவதும் சுயமான முடக்க நிலையை மக்கள் மேற்கொண்டதால் அரசாங்கத்திற்குத் தனிமைப்படுத்தும் ஊரடங்கு சட்டத்தை அமல்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

அரசாங்கம் பொருளாதாரத்தில் கடும் வீழ்ச்சியை சந்தித்து வரும் நிலையில், நாட்டை முடக்க விரும்பியிருக்கவில்லை. ஆனால், நாட்டில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கையும், நாளாந்தம் கொரோனா தொற்றால் உயிரிழக்கும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வரும் நிலையில், அரசாங்கம் வேறு வழியின்றி இந்த முடிவை எடுக்க வேண்டி வந்தது.

நாட்டை மேலும் முடக்கி வைப்பதை இலங்கையால் தாங்க முடியாது என்று நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாடு முடக்கப்பட்டதால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நாளாந்த இழப்பு 15 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக உள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை போன்ற ஒரு நாட்டை மூடுவதால் ஏற்படும் பொருளாதார தாக்கம் சிறியதல்ல என்றும், முடக்கத்தைக் குறைக்க அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் கூறுகின்றார்.

தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார அழுத்தத்தை சமாளிப்பதற்காக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தங்கள் ஒருமாத சம்பளத்தை கொரோனா நிதியத்திற்கு வழங்கி வருகின்றனர். அரசாங்க ஊழியர்களும் தங்கள் ஒரு மாத சம்பளத்தை வழங்க வேண்டும் என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்கு எதிர்ப்புகளும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், பொருட்களில் விலைகளும் அதிகரித்துள்ள சூழ்நிலையில் அரசாங்க ஊழியர்களிடமோ பொது மக்களிடமிருந்தோ நிதியை அறவிடுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என எதிர்க்கட்சிகளும் கருத்து வெளியிட்டுள்ளன.



மக்களைத் தியாகம் செய்யுமாறு கோரிக்கை விடுப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமை இல்லை என்று முன்னாள் பிரதமரான ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார். உலக சுகாதார ஸ்தாபனம் கொரோனா பரவலை கட்டுப்படுத்த நிபுணர் குழுவை நியமிக்க அழைப்பு விடுத்தது என்றும், இலங்கையைத் தவிர அனைத்து நாடுகளும் அக்கோரிக்கையை நிறைவேற்றியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதே ஒரே தீர்வு என்றும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். கொரோனாவைக் கட்டுப்படுத்தவும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளவும் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 720 மில்லியன் அமெரிக்க டொலர் மானியம் வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், முடக்க நிலை இன்னும் ஒரிரு வாரங்களுக்கு நீட்டிக்கப்படுவது அவசியம் என்றும் ரணில் விக்ரமசிங்க கூறுகின்றார். இதேவேளை, தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள இக்காலப் பகுதியில் இலங்கையில் கொரோனா தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளதா? இறப்பு வீதம் குறைந்துள்ளதா? என்றால் அவ்வாறான மாற்றங்கள் நிகழவில்லை. மேலும் அதிகரித்து வருகின்றது என்பதுதான் ஆபத்தான விடயம். நாடு முடக்கப்படாமலிருந்த காலப்பகுதியில் இரண்டாயித்திலிருந்த நாளாந்த தொற்றாளர் எண்ணிக்கை இப்போது நான்காயிரத்தைக் கடந்துள்ளது. நூறுகளில் இருந்த இறப்பு எண்ணிக்கை இப்போது இருநூறைக் கடந்துள்ளது.

ஆயினும், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் துரிமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டில் கணிசமான மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளன. தடுப்பூசி இரண்டு டோஸ்களை செலுத்திக் கொண்டோரும் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். கொரோனா தொற்றுப் பரவலையும், அதனால் ஏற்படுகின்ற மரணங்களையும் கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்திக் கொள்வதே தற்போதுள்ள ஒரே தீர்வு என மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, பொதுமக்கள் தவறாது தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ள வேண்டும்.

கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸ் 100 சதவீதமும், இரண்டாவது டோஸ் சுமார் 56 சதவீதமும் வழங்கப்பட்டுள்ளது என்றும், இந்த மாத இறுதிக்குள் கணிசமான மக்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ள நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தடுப்பூசி வழங்கப்பட்ட பின்னரும் கொரோனா பரவுவது தொடர்ந்தால், அடுத்த கட்ட நடவடிக்கையை பரிந்துரைப்பதற்காக சிறப்பு மருத்துவ குழுக்களை நியமிக்க வேண்டும் என்று சுகாதாரத்துறை பிரதானிகளிடம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தி, நாட்டை முழுமையாக திறக்கவே அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. பொருளாதாரம் மேலும் சரிவடைந்து செல்வதை தடுக்க வேறு வழியில்லை என்கின்றது அரசாங்கம்.

நாட்டில் கொரோனா பரவல் வேகமெடுக்கத் தொடங்கிய ஆரம்ப நாட்களிலேயே நாட்டை இரு வாரங்களேனும் முடக்கியிருந்தால் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தயிருக்கலாம். அரசாங்கம் காலம் தாழ்த்தியே இப்போது முடக்கல் நிலையை அமல்படுத்தியுள்ளது. அடுத்த மாதம் இறுதியில் நாட்டிலுள்ள அனைவருக்கும் தடுப்பூசியை வழங்கி முடிப்பது என்றும், அதன்பின்னர் பொருளாதார விடயத்தில் அதிக கவனத்தை செலுத்துவதென்பதாகவும் அரசாங்கம் எண்ணுகின்றது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் எதிர்வரும் செம்ரெம்பர் 6ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை 18ஆம் திகதி வரை நீடிக்க வேண்டியது அவசியம் என்கின்ற அழுத்தங்களும் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு 18ஆம் திகதிவரை நீடிக்கும் பட்சத்தில் 7 ஆயிரத்து 500 பேரின் உயிரை காப்பாற்ற முடியும் என உலக சுகாதார ஸ்தாபனத்தால் நியமிக்கப்பட்டுள்ள சுயாதீன தொழில்நுட்ப குழு சுட்டிக்காட்டியுள்ளது. எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதி வரை நீடித்தால் 10 ஆயிரம் பேரை பாதுகாக்க முடியும் எனவும் அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

வெறுமனே தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மட்டும் அமல்படுத்தாமல் மேலும், விஞ்ஞானபூர்வமான சில கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். சர்வதேச சுகாதார ஆலோசனையுடன் இது மேற்கொள்ளப்படல் வேண்டும். இப்போதாவது இதற்கான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தத் தவறினால் மிக மோசமான நிலைமையே ஏற்படும்.

## வரசரண சிவமுருகா! 'வைறஸ்'சை ஒழித்திடாயோ?
## வையத்தோர் தனைக்காக்க வண்ணத்தேர் ஏறிவாராய்!

குன்றுதோறும் குடியிப்போய்! 'கொடுஞ்சூரன் வதைத்தன்று
வென்றுவாகை சூடியசெவ் வேள்முருகன் தேர்விழாவும்
என்றுதானோ வரும் என்று இனிதேகாத் திருந்தவர்கள்
நன்றுவந்தோம் எனநல்லூர் நாடிவந்து கூடிடுவர்!

ஊரோடு ஒற்றுமையாய்க் கொண்டாடும் பக்தர்களைச்
சீரோடு வாழவைக்கும் சேந்தனவன் திருவிழாவில்
தாரோடு பொலிந்திலங்கும் சண்முகன்வேல் அமர்ந்ததிருத்
தேரோடு வலம்வருவோர் தெருவெல்லாம் நிரம்பிடுவர்!

ஆதிரையான் சொரூபநிலைச் சிவமான செவ்வேளே!
அருள்பொழியுஞ் சோதிவைவேல் தேரேறி வருநாளில்
சாதிவேறு பாடின்றிச் சகலரிலுஞ் சிவங்கண்டு
வீதிசுற்றி வினைதீர்க்கும் தேரிழுக்க ஊர்திரளும்!

முருகனுக்கு அரோகராவென் றதிரவெழும் ஒலியலைகள்!
கருதடியர் ஓதிவரும் பண்ணிசையில் திருமுறைகள்!
பெருகிவரும் பக்தியொடு விரவிவரும் காவடிகள்!
திருமுருகன் விழாக்காணப் போதாதே இருவிழிகள்!
கோலமயில் மீதேறிக் கோதையர்கள் அருகிருக்க
வேலதனைக் கரம்பற்றி வெற்றிக்கொடி தூக்கியொளி
காலவருந் திருக்கோலம் கண்டடியர் மெய்சிலிர்ப்ப
ஆலவாயான் திருக்குமரா! அற்புதத்தேர் ஏறிவாராய்!

முப்புரத்தை எரித்திட்ட முக்கண்ணன் சொரூபமானாய்
எப்பொழுதும் கதிநீயே என்றுதினம் உன்பெயரைச்
செப்பிநிற்கும் அடியாரைச் செவ்வேளே தேரேறித்
தப்பாமற் கரைசேர்க்கத் தயாபராதேர் ஏறிவாராய்!

குரவணிபன் னிருவாகா! குமரகுரு பரவேகா!




கொன்றொழிக்கும் 'கொறோனா'வை வென்றொழிக்கத்
தாமதமேன்?
வரசரண சிவமுருகா! 'வைறஸ்'சை ஒழித்திடாயோ?
வையத்தோர் தனைக்காக்க வண்ணத்தேர் ஏறிவாராய்!

தேர்வடத்தை இனிதிழுக்கத் திருவீதி வலஞ்செய்வாய்!
ஊர்நடப்பி லுருக்குலைந்த ஒற்றுமையின் சீர்கேட்டை
யாரிடத்து முறையிடுவோம்? நல்லைநகர்த் திருக்குமரா!
கார்நிறத்து மால்மருகா! கடிதுவந்து காவாயோ?

காதலொடு உனையேத்திக் கண்பனிப்பத் தொழுவோரைச்
சோதனைசெய் யாதினிநற் சுகமருளிக் காப்பாயோ?
பேதலிக்கும் அடியவரைப் பெரிதுவந்து ஆட்கொண்டு
பாதமலர் ஒளிகாட்டிப் பரமுத்தி அளிப்பாயோ?.

'சிவஞானச் சுடர் ' கலாநிதி
பாரதி இளமுருகனார்



# நாம் அனைவரும் கோவிட்-19 தடுப்பூசியைப் பற்றி மேலும் அறிய விரும்புகின்றோம்

கோவிட்-19
தடுப்பூசி
நடவடிக்கை





## நான் ஏன் தடுப்பூசி போட வேண்டும்?

இது கோவிட்-19 இலிருந்து பாதுகாக்கிறது மேலும் நீங்கள் நோய்வாய்ப்படுவதைத் தவிர்க்க உதவுகிறது. பலர் சிகிச்சைப் பெறாமல் குணமடைந்தாலும், சிலர் கோவிட்-19 ஆல் இறக்க நேரிடலாம் அல்லது இதய நோய் அல்லது நிமோனியா போன்ற நுரையீரல் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடலாம். நரம்பு மண்டலம் கூட பாதிக்கப்படலாம்

## நம்மைத் தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வோம்!

வரவிருக்கும் மாதங்களில், பெரும்பான்மையான மக்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளாத வரையில், கோவிட்-19 நீடித்து இருக்கும்.




உங்கள் இடைவெளியை கடைபிடியுங்கள்



உங்கள் முகத்தை மறைக்கவும்



உங்கள் சட்டையின் கைகளில் இருமவும்



கைகளை கழுவவும்

**Québec.ca/vaccinCOVID**

1 877 644-4545

20-279-31FA

Votre gouvernement

Québec

# அதிமுக, திராவிடர் கட்சியே கிடையாது!

## நேர்காணல் –திராவிடர் கழக துணைத் தலைவர் கலி. பூங்குன்றன் நேர்கண்டவர் – கண்ணன்


தமிழ்நாட்டின் எதிர்கால அரசியல் தலைமைகளில் முக்கியமானவர் கலி. பூங்குன்றன். பெரியார் தொடங்கிய திராவிடர் கழகத்தின் தலைவராக மணியம்மையார், கி. வீரமணி ஆகியோரைத் தொடர்ந்து அடுத்த தலைவர் பொறுப்பை ஏற்கவுள்ளவர். "நெருக்கடி காலத்தில் சிறப்பாகப் பணியாற்றிய, தற்போது திராவிடர் கழகத்தின் துணைத் தலைவர் பொறுப்பிலிருக்கும் கலி. பூங்குன்றன்தான் எனக்குப் பிறகு திராவிடர் கழகத்தின் தலைவர்" என்று தற்போதைய தலைவர் வீரமணியால் அறிவிக்கப்பட்டவர். அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை வேண்டும் என்று வலியுறுத்தி புத்தகம் எழுதியவர். இக்கோரிக்கை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் பெரியார் திடலில் கலி. பூங்குன்றனைச் சந்தித்தோம்.

**திராவிடர் கழகத்தின் அடுத்த தலைவர் பதவியை ஏற்க உள்ளவர் நீங்கள். அந்தப் பொறுப்பு குறித்து எப்படி உணர்கிறீர்கள்?**

இந்த இயக்கம் சமூக மாற்றத்திற்கான இயக்கம். பெரியார் இருக்கும்போது மணியம்மை அம்மாவை அடுத்த தலைவராகக் குறிப்பிட்டார். இப்போது, ஆசிரியருக்கு (கி. வீரமணி) வயது 87 ஆகிறது. அதனால், இது சரியான காலகட்டம் என்று அறிவித்திருக்கிறார். சரியாகச் சொன்னீர்கள்; இந்த இயக்கத்திற்கு தலைவர் என்பது பதவி அல்ல, பொறுப்பு தான். திராவிடர் கழகத்தின் பணி என்பது சமூக நீதிக்கான, மூட நம்பிக்கைகளுக்கு எதிரான போராட்டங்களும் பிரசாரங்களும் தான். கொடுத்த பொறுப்பை ஏற்று எனது பணியை செய்வேன். இது ராணுவக் கட்டுப்பாடுப் போன்ற இயக்கம். ஆசிரியர் கொடுத்த துணிவால் சமாளிக்க முடியும் என்று நினைக்கிறேன்.

**அடுத்த தலைவராக உங்களைத் தேர்ந்தெடுக்கக் காரணம்?**

இதனை ஆசிரியரிடம்தான் கேட்க வேண்டும். நான் 1957ஆம் ஆண்டிலிருந்து பெரியார், அன்னை மணியம்மையார், ஆசிரியர் மூன்று தலைவர்களிடமும் பணியாற்றியிருக்கிறேன். கால்நடை விரிவாக்க அலுவலராக அரசுப் பணியில் இருந்த என்னை, அய்யா மறைவுக்குப் பிறகு, ஆசிரியர் சென்னைக்கு அழைத்துக் கொண்டார். 45 ஆண்டுகளாக, அவருடனேயே இருக்கிறேன். நெருக்கடி காலக் கட்டத்தில், ஆசிரியர் சிறையில் இருந்த போது, அன்னை மணியம்மையாருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. அந்தச் சூழ்நிலையிலும் நான் விடுதலை பத்திரிகையை வெளிக்கொண்டு வந்தேன். பத்திரிகை தொடர்புகள், இயக்கத்தில் தமிழ்நாடு முழுக்க உள்ள தொடர்புகள் மூலமும் எனக்கு ஓர் அறிமுகம் இருக்கிறது. எனது திருமணமே பெரியார் தலைமையில்தான் நடந்தது. என் மகளுக்கு பெரியார்தான் 'அன்புமதி' என்று பெயர் வைத்தார். இதனையெல்லாம் ஆசிரியர் நினைத்தே என்னை அறிவித்திருக்கிறார் என்று நினைக்கிறேன்.




**பெரியார், கி. வீரமணியுடன் பணியாற்றிய அனுபவம்?**

அய்யாவின் உழைப்பும் எளிமையும், அடுத்தவருக்கு கொடுக்கும் மரியாதையும் பிடிக்கும். ஆசிரியர் 10 வயதிலிருந்தே இந்த இயக்கத்தில் இருக்கிறார். ஆசிரியரும் பெரியாரைப் போன்றே கடும் உழைப்பாளி. இப்போதும், சமூக நீதி மாநாடுகளை நடத்திக் கொண்டிருக்கிறார். ஆசிரியரின் ஒழுக்கம், தன்னம்பிக்கை, எளிமை, நேரத் திட்டமிடல், துல்லியம், எதையும் ஆதாரத்துடன் பேசுவது போன்றவற்றைக் கண்டு எப்போதும் வியப்பேன்.

**திராவிடர் கழகம் அரசியல் கட்சியாக மாற வாய்ப்புள்ளதா?**

திராவிடர் கழகத்தை ஆரம்பித்தபோதே, "நாம் பதவிப் பக்கம் செல்வதில்லை" என்று தீர்மானம் போட்டார் பெரியார். அந்தத் தீர்மானத்தை அண்ணாதான் முன்மொழிந்தார். அன்றிலிருந்து இன்று வரை அய்யாவின் தீர்மானத்தை, இந்தக் கழகம் பின்பற்றி வருகிறது. "மக்களிடம் சமூக சிந்தனை வந்தாலே போதும். அரசியலுக்குச் சென்றால் கொள்கையில் சமரசம் செய்ய வேண்டியிருக்கும். அதனால், அரசியல் வேண்டாம்" என்றார். எத்தனையோ பேர், அவரை அரசியல் பதவியை ஏற்கச்சொல்லியும் மறுத்து விட்டார். ஆனால், நேரடி அரசியலில் இல்லை என்றாலும் அரசியல் விழிப்புணர்வூட்டினார். அய்யா காட்டிய அந்த வழியில் இக்கழகம் எப்போதும் பயணிக்கும். இது பெரியார் மண்தான் என்பதை இப்போது தமிழ்நாட்டு இளைஞர்களும் உணர்ந்துள்ளனர். எனவே, எங்கள் பொறுப்பு அதிகமாகியுள்ளது.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


**பெரியார் பூமி என்று பெருமையாக சொல்லிக்கொள்ளும் இப்பூமியில் தான் இன்னும் ஆணவப் படுகொலைகள் தொடர்கிறதே?**

சாதியை ஒழிக்க மக்கள் மத்தியில் இன்னும் பிரச்சாரம் செய்ய வேண்டியுள்ளதையே இது காட்டுகிறது. அதற்காக நாங்கள் நிறைய திட்டமிட்டுள்ளோம் செய்துகொண்டும் வருகிறோம். ஆணவப் படுகொலையை சட்டத்தால் மட்டுமே ஒழிக்க முடியாது. மக்கள் மத்தியில் விழிப்புணர்வு வரவேண்டும். அதற்கு நாங்கள் பாடுபடுவோம்.

**திராவிட இயக்கத்தின் நீட்சிதானே அதிமுக. அவர்கள் பாஜகவுடன் கூட்டணி வைத்திருக்கிறார்களே?**

அதிமுக, திராவிட இயக்கத்தின் நீட்சி இல்லை. "தேவை இல்லாமல் அண்ணாவையும் திராவிடத்தையும் பயன்படுத்துகிறீர்கள். இந்த இரண்டுக்கும் உங்கள் நடவடிக்கைகளுக்கும் சம்மந்தமே இல்லை. மாநில சுயாட்சி இல்லாமை, பகுத்தறிவு இல்லாமை போன்றவற்றால் அதிமுகவை திராவிட இயக்கமாக ஏற்றுக்கொள்ள முடியாது" என்று ஆசிரியரே கூறியுள்ளாரே. 69 சதவீத இடஒதுக்கீட்டை பாதுகாத்த காரணத்திற்காக அப்போது ஆசிரியர் ஜெயலலிதாவை பாராட்டினார், அவ்வளவுதான். அவர்கள் திராவிட இயக்கம் என்று பெயர் வைத்துக்கொண்டு மோடியுடன் கை கோர்த்திருப்பது மக்கள் விரோத செயல்.

**திமுக ஆட்சி பொறுப்பேற்று நூறு நாட்கள் கடந்துவிட்டது. உங்கள் மதிப்பீடு என்ன?**

இந்த நூறு நாள்களுக்குள் திமுக சாதித்து இருப்பது அசாதாரணமானதே. ஆட்சி ஏற்ற அன்றே மு.க. ஸ்டாலின் கையெழுத்திட்ட கோப்புகள் - நகரப் பேருந்துகளில் இலவசமாகப் பெண்கள் பயணம், பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய்க் குறைப்பு, கொரோனா நிவாரண நிதியாக ரூ.4000 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குதல் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் 13 மளிகைப் பொருட்கள் - எல்லாம் திமுக ஆட்சி யாருக்கானது என்பதற்கான அருமையான அடையாளங்களாகும்.

கொரோனா தொற்று மிக உக்கிரமாக இருந்த காலகட்டத்தில் அதனைச் சந்தித்து, மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டியதும் முக்கியமான பணி.

மருத்துவக் கல்வியில் அகில இந்திய ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு அறவே இடஒதுக்கீடு கிடையாது என்ற அடம் பிடித்த ஒன்றிய அரசின் போக்குக்கு கடிவாளம் போட்டு, தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு முதற்கட்டமாக 27 விழுக்காடு கிடைக்கச்செய்த சாதனை சாதாரணமானதா?

ஜாதி, தீண்டாமை ஒழிப்புப் பாதையில் - தந்தை பெரியார் இறுதியாக அறிவித்து களத்தில் நின்ற அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமையில் வெற்றி முத்திரையைப் பொறித்த பொன்னேட்டுக்குச் சொந்தமானது இவ்வாட்சி.

ஆறு மாதத்துக்கான நிதி நிலை அறிக்கை நின்று பேசக் கூடியதே வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கை இந்தியத் துணைக் கண்டத்தையே திரும்பிப் பார்க்கச் செய்திருக்கிறது.

இக்குறுகிய காலத்திலேயே இந்தியாவின் தலை சிறந்த முதலமைச்சர் என்ற நிலையை மு.க. ஸ்டாலின் எட்டியுள்ளார்! நூறு நாட்களுக்குள்ளேயே இவ்வளவு என்றால், எஞ்சிய காலம் ஈடு இணையற்ற பொற்காலமாக ஜொலிக்கும் என்பதில் ஐயமில்லை.

**ஆனால், அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை, ஆலயத்தில் தமிழில் வழிபாடு - இவை எல்லாம் அறநிலையத் துறையின் அத்துமீறல் என்று 'துக்ளக்' பத்திரிகை கூறுகிறதே?**

தமிழ் மன்னர்களின் செல்வத்தாலும் தமிழரின் உழைப்பாலும் உருவாக்கப் பட்டவைதான் தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள். தமிழர் கோயிலில் தமிழர் அர்ச்சகரானால், தாய்மொழியாம் தமிழில் அர்ச்சனை செய்தால் அது அத்துமீறல் என்றால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். கேட்டால் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது என்று வேலிக்கு ஓணான் சாட்சியாக ஓலமிடுகின்றனர். அவர்களாகவே எழுதி வைத்துக்கொண்டது, அவர்களுக்கானதாகத் தானே இருக்கும்.

அப்படியே பார்த்தாலும் இவர்கள் கூறும் ஆகமம் என்பது வேறு - தமிழில் உள்ள ஆகமங்கள் வேறு. நீதிபதி எஸ்.மகராஜன் தலைமையில் எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக இருந்தபோது அமைக்கப்பட்ட

தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

## COMMERCIAL CONDO FOR SALE
### in Scarborough




- Brand new building
- Limited number of units available
- Size starts from 1165 sq.ft

## LAND FOR SALE
### in Innisfil




50 Acres of agriculture/ farming land ( North of Bradford), 2 blocks west of Yonge St.

## COTTAGE FOR SALE - in Perry Sound

- Bungalow House
- Land size over 3 acres
- walkout basement

Asking $549K



For More info. Call:

**Raja Mahendran****

**416.315.9397**

## HomeLife / GTA Realty Inc. Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

**416.321.6969**

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated ** Broker

# இன்னல் நீக்கும் இயற்கை 72



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே!
நீண்ட இடைவெளிக்குப் பின்பு இந்தத் தொடர்கட்டுரையைத் தொடர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. மீண்டும் இந்தக் கட்டுரை மூலமாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சோதிடக்கலை ஆழமான விஞ்ஞானக் கோட்பாடுகள் நிறைந்த அறிவியல் என்றே சொல்ல வேண்டும். சோதிடத்தில் தேவையான கணித்தலில் கணிதம் உட்பட முக்கிய அறிவியல் கூறுகள் கலந்து உள்ளன. மனிதனின் உடல் நலத்தில் சோதிடமும் முக்கிய காரணியாக உள்ளது. சோதிடம் நுட்பமான கணித்தல் அடங்கிய விடயம். சோதிடத்தை வெறுமனே பணம் சம்பாதிப்பதற்காகப் பிழையாகச் சிலர் கூறுவதால் பலருக்கும் அதன் மேலுள்ள நம்பிக்கை குறைந்து விட்டது. சோதிடத்தை நம்புவது வெறுமனே மூடநம்பிக்கை என்று சொல்வோரும் அதிகமாகி விட்டனர். ஆனால் மனிதனின் உடல்நலத்தில் சோதிடத்திற்கும் தொடர்பு இருப்பதால் அதைப்பற்றியும் சில குறிப்புக்களை இந்தத் தொடர் கட்டுரையில் குறிப்பிட விரும்புகிறேன்.

சோதிடம் என்பது இயற்கையோடு தொடர்புடைய விடயம் என்பதால் சோதிடத்தில் உள்ள சில உடல் நலம் பற்றிய விடயங்களை அறிந்திருப்பது நன்மை யளிக்கும் என்று எண்ணுகின்றேன். ஆரோக்கிய சோதிடம் (Health Astrology) அல்லது மருத்துவ சோதிடம் (Medical Astrology) போன்ற துறைகள் இந்தக் காலத்தில் மிகவும் பிரபல்யம் பெற்று வருகின்றன.


சந்திரனின் சுழற்சிகளுடன் உங்கள் உடல் ஆரோக்கியம் அல்லது நல்வாழ்வு போன்ற விடயங்கள் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது. சந்திரன் சக்தியைப் பிரதிபலிக்கிறது. சந்திரன் உங்கள் உணர்ச்சிகளை ஆளுகிறது. சந்திரன் உங்களுக்குள் இருக்கும் குழந்தை. சந்திரன் உங்கள் சாதகத்தில் இருக்கும் முக்கியமான அடையாளம்.

உங்கள் சாதகத்தில் உங்கள் சந்திரன் அடையாளம் மிகவும் முக்கியமான இடம். சந்திரன் உங்கள் உணர்ச்சிகளை ஆளுகிறது. உங்களுக்குள் இருக்கும் குழந்தை. உங்களால் தேவைப்படுபவர் தான் இந்த உலகிற்கு வருகிறார். யாராவது உங்களை கவனித்துக் கொள்ளாமலும், உங்களுக்கு உணவளித்தும், உங்களுக்கு ஆடை அணிந்தும், உங்களை கவனித்துக் கொள்ளாமலும் இருந்தால், நீங்கள் வாழ முடியாது.

ஒவ்வொரு 28-29 நாட்களுக்கு ஒரு முறை சந்திரன் நீங்கள் பிறந்தபோது இருந்த இடத்திற்குத் திரும்பவும் வரும்.

சூரியன் ஒரு வருடத்திற்கு ஒரு முறை நீங்கள் பிறந்த இடத்திற்குத் திரும்பவும் வரும்.

சந்திரன் ஒவ்வொரு 2 1/2 நாட்களுக்கு ஒரு முறை அடையாளத்தை மாற்றுகிறார். இது சூரியனை விட அதிக உணர்திறன் கொண்டது, இது ஒவ்வொரு 30 நாட்களுக்கும் அடையாளத்தை மாற்றுகிறது. நம்மைச் சுற்றியுள்ள கிரகங்கள் மற்றும் நட்சத்திரங்களுடன் நாம் பிரிக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளோம்.




எப்போது அறுவை சிகிச்சை செய்ய வேண்டும், எப்போது பயிர்களை நாட்ட வேண்டும், எப்போது உங்கள் தலைமுடியை வெட்ட வேண்டும் சோதிட ரீதியாக, குறைவான, சாதகமான நேரங்கள் உள்ளன என்பதைப் பல நிபுணர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். ஒவ்வொரு 2 வாரங்களுக்கும் ஓர் அமாவாசை மற்றும் ஒரு முழு நிலவு உள்ளது. இவை மாதத்தில் இரண்டு குறிப்பிடத்தக்க புள்ளிகள். புதிய நிலவு புதிய தொடக்கங்களுக்கான வாய்ப்புகளால் நிரம்பியுள்ளது. முழு நிலவு நிறைவு மற்றும் பலனளிக்கும் நேரம். புதிய நிலவு மற்றும் முழு நிலவு குறைவாக உட்கொள்ள நல்ல நேரம். சில நேரங்களில் மக்கள் உண்ணாவிரதம் அல்லது வெறும் திரவங்களைக் உட்கொண்டு வந்துள்ளனர். இந்த முக்கிய நேரங்களில் பொதுவாக உங்கள் செரிமான அமைப்பில் குறைந்த சுமையை வைக்க இது ஒரு நல்ல நேரம். மாதத்தின் மற்ற நேரங்களில் உங்கள் உடல் நலத்துடன் தொற்றுகள் அல்லது ஏற்ற தாழ்வுகளிலிருந்து உங்களை நீங்கள் காப்பாற்றிக் கொள்ளலாம்.

